**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 376 /2019 PW . 7**

| | |
|---|---|
| பெயர் : கருப்பாயி | தந்தை/கணவர் பெயர்: முத்தன் |
| ஊர் : | தாலுகா : |
| வயது : | தொழில் : |
| ஜாதி : | சமயம் : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.04.2026

---

**(1,2 எதிரிகள் ஆஜரில்லை. 1,2 எதிரிகள் சார்பில் BNSS பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**29.04.2026 முதல் விசாரணை:**

1. நான் தற்போது பூலாங்குறிச்சியில் குடியிருந்து வருகிறேன். கடந்த மார்ச் 3 ம் தேதி 2017 ம் வருடம் எனக்கு சொந்தமான 5 சவுரன் தங்க நகையை சிங்கம்புணரி, காரைக்குடி ரோட்டில் உள்ள மணப்புரம் கோல்டு பைனான்ஸ் கிளையில் எனது பெயரில் அடகு வைத்து ரூ.80,000 /– பணமாக பெற்றேன். மீண்டும் மேற்படி நகையை 3 ½ மாதங்கள் கழித்து திருப்புவதற்காக மேற்படி கிளைக்கு சென்ற போது மேற்படி நிறுவனத்தில் எனது பெயரில் நான் அடகு வைத்த நகைக்கு பதிலாக போலியான நகை இருந்தது. மேற்படி நிறுவனத்திலிருந்து எனக்கு எடுத்து காட்டினார்கள். மேற்படி போலி நகைகள் குறித்து விசாரித்த போது ராஜ்குமாரும், தினேஷ் குமாரும் என்னிடம் இதற்கு முன்னாள் மேலாளராக இருந்த மனோஜ்குமார் எடுத்து மாற்றி வைத்து விட்டதாக என்னிடம் கூறினார்கள். அது குறித்து புகார் கொடுத்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள். தற்போது வரை மேற்படி எனது நகையை நான் பெறவில்லை.

**1 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

2. போலீஸ் விசாரணையில் என்ன வகையான நகை என்று நான் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன். நகை வாங்கியததற்கான இரசீதுகள் மற்றும் மச்ச சான்றுகள் நான் வங்கியில் கொடுக்கவில்லை. சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. நிறுவனத்திற்கு சென்றபோது சொன்னார்கள். போலீசார் 3 மாதங்களில் என்னை விசாரித்தார்கள். தனிப்பட்ட முறையில் நான் வங்கி மீது புகார் எதுவும்

கொடுக்கவில்லை. கடைசி வரை நான் நகையை நான் வாங்கவில்லை. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

3. சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. நிறுவனத்திற்கு சென்றபோது சொன்னார்கள். போலீசார் 3 மாதங்களில் என்னை விசாரித்தார்கள். தனிப்பட்ட முறையில் நான் வங்கி மீது புகார் எதுவும் கொடுக்கவில்லை. கடைசி வரை நான் நகையை நான் வாங்கவில்லை. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி அரசு மற்றும் குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பு வழக்குரைஞர்களுக்கு முன்பாக சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
சிங்கம்புணரி.